**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி**

**O.S.No.**96/2016

2025 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 11.03.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | அஞ்சப்பன் | ஜாதி | : | |
| த/பெயர் | : | சோமு | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை 1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி

என் தகப்பனாருடன் உடன்பிறந்தவர்கள் நடேசன், ராசு, வடிவேல், சீனியம்மாள் ஆகியோர்கள் ஆவார்கள். யார், யார் உயிருடன் இருக்கிறார்கள் என்றால் அனைவரும் இறந்துவிட்டார்கள். என்னுடைய வழக்குரையில் என் அப்பாவுடன் பிறந்த சீனியம்மாள் என்பவர் 50 ஆண்டுகளுக்கு முன்பாக இறந்துவிட்டபடியால் அவருக்கு குடும்ப சொத்துக்களில் எந்தவித பாகமும் இல்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சீனியம்மாள் எந்த வருடம் இறந்தார் என்றால் அதுப்பற்றி தெரியாது. அவருக்கு திருமணம் ஆகிவிட்டது. சீனியம்மாள் என்பவருக்கு கோவிந்தம்மாள் என்கிற மகள் உள்ளார். கோவிந்தம்மாள் என்பவருக்கு திருமணம் நடைபெற்று விட்டது என்றால் சரிதான். அவருக்கு ஒரு ஆண், ஒரு பெண் குழந்தை உள்ளது.

தாவா சொத்துக்களை பொறுத்து சீனியம்மாள் என்பவருக்கு எந்தவித பாக வீதமும் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். சீனியம்மாள் வாரிசான கோவிந்தம்மாள் மற்றும் அவரது பிள்ளைகளுக்கும் சொத்துக்கள் ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து நாகப்பிள்ளை என்பவரின் பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. நாகப்பிள்ளை, நடேசன், வடிவேல், ராசு மற்றும் எனது தகப்பனார் ஆகியோர்களால் கூட்டாக வாங்கிய சொத்தாகும். புல எண்.477/10 மட்டும் தான் நாகப்பிள்ளைக்கு சொந்தமானது ஆகும். நஞ்சை புஞ்சைகள் இருந்து இருக்கலாம். நாகப்பிள்ளைக்கு சொந்தமான புல எண்.477/10 ல் உள்ள சொத்திலும் சீனியம்மாள் மற்றும் அவரது வாரிசுகளுக்கும் ஒதுக்கப்படவில்லை என்றால்

சரிதான். சீனியம்மாள் எனது குடும்பத்தில் ஒரு வாரிசு என்றாலும், அவருக்கு எந்தவிதமான சொத்துக்களும் ஒதுக்கப்படாமல் மற்ற நபர்களுக்கு ஏற்படுத்திக்கொண்ட பாகப்பிரிவினை ஆவணம் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த காலத்தில் திருமணம் செய்து சீர்வரிசை மட்டும் தான் செய்து வந்தார்கள்.

தாவா வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள ரைஸ் மில் யாருக்கும் ஒதுக்கப்படாமல் பொதுவாக அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். குடும்பத்தில் ஏற்பட்ட பாகப்பிரிவினை ஆவணத்தில் ரைஸ் மில் குறித்து சொல்லப்படவில்லை என்றால் சரிதான். ரைஸ்மில்லை பொறுத்து ஏற்கனவே இதே நீதிமன்றத்தில் 1980 ல் ஒரு வழக்கு நடைபெற்று அதில் ரைஸ் மில்லை 4 நபர்களும் பொதுவில் அனுபவிக்கவேண்டும் என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

எனது வழக்குரையில் பிரதிவாதிகளின் தகப்பனாரும், எனது தகப்பனாரும் சமாதானம் ஆகிவிட்டதாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அவ்வாறு சொல்லியிருந்தால் அது தவறு என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. ரைஸ் மில் தற்போது வடிவேல் குமாரர் 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது. பாகப்பிரிவினை சீட்டில் எத்தானவது அயிட்ட சொத்து என் தகப்பனாருக்கு கிடைக்கப்பெற்றது என்றால் மொத்தம் 12 அயிட்ட சொத்துக்கள் எழுதப்பட்டுள்ளது. அதில் பாதி அழிந்துவிட்டது. அதனால் குறிப்பிட்டு தெரியவில்லை. மேற்கண்ட 12 அயிட்ட சொத்துக்களை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் சரியாக ஞாபகமில்லை. எனது தகப்பனாருக்கு 12 அயிட்ட சொத்துக்களில் எவ்வளவு பாக வீதம் உள்ளது என்றால் 4-ல் 1 பங்கு உள்ளது.

புல எண்.475/2-ல் என் தகப்பனாருக்கு 38 சென்ட் பாக வீதம் உள்ளது. அதில் 5 சென்ட் சொத்தை வடிவேல் கிரையம் பெற்றுள்ளார். 38 சென்ட் எனது தரப்பில் தாக்கல் செய்துள்ள பாகப்பிரிவினை சீட்டில் எந்த இடத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் புல எண்.475/2-ல் 28 சென்டு என குறிப்பிட்டு அதன் கீழ் 10 சென்ட் என குறிப்பிடப்பட்டுள்ளது. பாகப்பிரிவினை சீட்டில் புல எண்.475/2 ன் பழைய புல எண்.475/9 ஆகும். புல எண்.475/2-ல் உள்ள மொத்தம் 48 சென்ட். அதில் வடிவேல் என்பவருக்கு 5 சென்ட், ராஜ் என்பவருக்கு 5 சென்ட், என் அப்பாவிற்கு 38 சென்ட்ஆகும். புல எண்.475/2 சொத்தை பொறுத்து சீனியம்மாளுக்கு ஒதுக்கப்படவில்லை என்றால் சரிதான். எங்கள் குடும்பத்தில் 27.10.1987 ஆம் வருடம் ஒரு விடுதலை பத்திரம் எழுதப்பட்ட விவரம் தெரியுமா என்றால் தெரியும். 1

மற்றும் 2 பிரதிவாதியின் தகப்பனார் வடிவேல் என்றால் சரிதான். கடந்த 08.06.1984 ஆம் வருடம் எனது தகப்பனார் சோமு எழுதி கொடுத்த கிரைய சாசனம் குறித்து தெரியுமா என்றால் தெரியும். அந்த ஆவணம் வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.புல எண்.475-ல் 5 செண்டும், 476 ல் 11 சென்டும் கிரையம் செய்து கொடுத்தோம்.

எனது தகப்பனாருடன் உடன் பிறந்த ராஜு மற்றும் வடிவேல் சேர்ந்து 25.05.1982 ஆம் வருடம் ஏற்படுத்திக்கொடுத்த விடுதலை பத்திரம் பற்றி தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அந்த ஆவணம் வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து தொடர்பாக முழு விவரமும் தெரியும் என்றாலும், அனைத்து விவரங்களை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தள்ளுபடி செய்ய தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ஆவணம் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவமும், சுவாதீனம் பிரதிவாதிகள் வசம் உள்ளதால் நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்தின் அனுபவம் என்னிடம் தான் உள்ளது. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அவர்களுடைய தகப்பனாருக்குரிய சொத்தை பொறுத்து தான் பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள எந்த பரிகாரமும் எனக்கு கிடைகத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
Date: 2025.03.11 18:35:23 +0530

District Munsif
Mannargudi.